# வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

## பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்

## சிறப்பு மலர் - 2018



செம்மொழியான தமிழுக்கு அமெரிக்காவில் உள்ள ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் தனி இருக்கையைத் தோற்றுவிக்கும் தகைச் சான்றபணிக்கு, SRM கல்விக் குழுமங்களில், அதிகளவில் நிதிஉதவி அளித்த நம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியை அகமகிழ்ந்து பாராட்டி, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசை நம் பாரிவேந்தர் ஐயா அவர்களின் பொற்கரங்களால் வழங்கப்பட்டு, நம்கல்லூரி கௌரவிக்கப்படும் நிகழ்வு.

# நன்றிக்கடன்

எனை ஈன்ற என்தாயே,
என்ன வேண்டும்? எனக்கேட்டால்,
எழுபிறவி எடுத்தாலும்
'என்மகனே நீ' என்பாய்

தாயிடத்துப் பட்டகடன்
தனயன் அடைப்பதற்கு
என்னவழி உண்டென்று
எண்ணிநான் பார்க்கின்றேன்

வங்கிக்கடன் பட்டதுண்டு;
வட்டியுடன் அடைத்ததுண்டு!
இரத்தமும் சதையுமாய்
இறைதாயும் நீயாகி
நாள்தோறும் காக்கின்ற
நாயகியே நானுரைப்பேன்,

'நீ எனக்கு மகனாகி
நானுனக்குத் தாயாகி'
எழுபிறவி எடுத்தேனும்
என்சபதம் மேற்கொண்டு,

'என்னதவம் செய்தாளோ
இவனைப் பெறுவதற்கு'
என்று பலர் பேசிட்டால்
என் சபதம் வெற்றி பெறும்

என்பிறவி இதனாலே
என் வாழ்வில் முற்றுப்பெறும்
நான்பட்ட உன்கடனும்
நன்றியுடன் அடைந்திடுமே!





(மாண்பமை வேந்தர் அவர்களின் படைப்பான 'தாயாகி வந்த தெய்வம்' என்ற நூலிலிருந்து.)

# அமைப்புக் குழு

## தலைமைப் புரவலர்கள்

டாக்டர் **தா.இரா. பாரிவேந்தர்**
நிறுவனர் & வேந்தர், SRM கல்விக்குழுமம்

திரு. **இரவி பச்சமுத்து**
தலைவர், SRM கல்விக்குழுமம்.

முனைவர் **ப. சத்தியநாராயணன்**
தலைவர், SRM அறிவியல் (ம) தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.

## முதன்மை அமைப்பாளர்கள்

முனைவர் **தி.பொ. கணேசன்**
இயக்குநர், வள்ளியம்மை பொறியியல் கல்லூரி,
இணைத் துணை வேந்தர்(P&D). SRM அறிவியல் (ம) தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.

முனைவர் **பா.சிதம்பரராஜன்**
முதல்வர், வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

முனைவர் **ம. முருகன்**
துணை முதல்வர், வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## அமைப்பாளர்

முனைவர் **பா. வானதி**
பேராசிரியர் & துறைத்தலைவர், கணினி அறிவியல் பொறியியல் துறை, வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## ஒருங்கிணைப்பாளர்

திரு. **க. சண்முகம்**
உதவிப்பேராசிரியர், கணினி அறிவியல் பொறியியல் துறை, வள்ளியம்மை பொறியியல் கல்லூரி.

## ஆசிரியர்கள் குழு

திருமதி இரா. தேன்மொழி, உதவிப்பேராசிரியர், தகவல் தொழில் நுட்பத்துறை
திரு. ம. செல்வராஜ், உதவிப்பேராசிரியர், மின்னணுவியல் தொலைத் தொடர்புத்துறை
திரு. சு. வெங்கடேஷ், உதவிப்பேராசிரியர், மின்னியல் மின்னணுவியல் துறை
திரு. ச. பிரவின்குமார், உதவிப்பேராசிரியர், மின்னணுவியல் கருவியாக்கம் துறை
திரு. க. ஆறுமுகம், உதவிப்பேராசிரியர், இயந்திரவியல் துறை
திரு. க .வைத்தியநாதன், உதவிப்பேராசிரியர், குடிமுறை பொறியியல்துறை
திரு. ச. இராஜா, உதவிப்பேராசிரியர், மேலாண்மையியல்துறை
திருமதி தா. ஸ்ரீதேவி, உதவிப்பேராசிரியர், கணினிபயன்பாட்டுத்துறை
திருமதி மா. ஆர்த்தி, உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை

## மாணவர்கள் குழு

செல்வன் கு. ஸ்ரீநாத், (ஒருங்கிணைப்பாளர்)
செல்வன் கு. சங்கர தாஸ் (இணை ஒருங்கிணைப்பாளர்)
செல்வன் சு. இரத்தன கிரிதரன் (இணை ஒருங்கிணைப்பாளர்)
செல்வன் இர. பானு பிரகாஷ் (செயற்குழு உறுப்பினர்)
செல்வன் அ. அருண் குமார் (செயற்குழு உறுப்பினர்)

முனைவர் **தி.பொ. கணேசன்** அவர்கள்
இயக்குநர், வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
தலைவர், தமிழ்ப்பேராயம்
இணைத் துணைவேந்தர், SRMIST

# வாழ்த்துரை

உலகத் தரத்தில் உயர்கல்வி தருவதற்காக SRM கல்விக் குழுமத்தைத் தோற்றுவித்த மாண்பமை வேந்தர் டாக்டர் தா.இரா. பாரிவேந்தர் அவர்கள், தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகையிலும், மற்றும் நம் கல்விக்குழுமக் கல்லூரி மாணவர்களிடையே தமிழ்ப்பற்றையும் பண்பாட்டுப் பெருமையையும் உணர்த்துவதற்காகவும் உருவாக்கப்பட்டதுதான் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்.

மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை இம்மன்றம் வழங்கி வருவதை நான் நன்கு அறிவேன். அவர்களுடைய சாதனைகளையும், மன்றச் செயல்பாடுகளையும் மற்றும் அவர்களின் படைப்பாற்றலையும் அங்கீகரித்து உலகிற்கு உணர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்தச் சிறப்பு மலர் வெளிவர இருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்பமை வேந்தர் அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் செயல்படும் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் அவரது நெறிகளின் வழி நின்று நீடு வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்.

பேராசிரியர்களும், மாணவர்களும் இணைந்து கூட்டு முயற்சியாகச் செய்யும் பல்வேறு மன்றச் செயல்பாடுகள், மேலும் மாணவர்கள் பங்கேற்கும் தமிழ் இலக்கிய நிகழ்வுகள் மூலம் எண்ணற்ற பல பேச்சாளர்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் உருவாக்கி எதிர்காலத் தமிழகத்திற்கு அரிய பயன்களை விளைவிக்கும் என்று உறுதியாக நம்புகிறன்.

**தி.பொ. கணேசன்**

முனைவர் **பா.சிதம்பரராஜன்** அவர்கள்
முதல்வர்
வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

## வாழ்த்துரை

பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் செப்டம்பர் 3, 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கல்லூரியில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் மிகக் குறைவான மாணவர்களே உறுப்பினர்களாக இருந்தபோதும் பயிற்சியிலும் போட்டிகளில் பங்கேற்பதிலும் நிறைவாகவே இருந்தனர். பல போட்டிகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று தங்களை மெருகேற்றிக் கொண்டதோடு அல்லாமல் கல்லூரிக்கு தன்னம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்ந்தனர். பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் மென்மேலும் வளர வாழ்த்துக்கள். இத்தமிழ் மன்றத்தைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் ஆசிரியர் திரு. க. சண்முகத்துக்கு என் வாழ்த்துக்கள்.

**பா. சிதம்பரராஜன்**
முதல்வர்

முனைவர் **ம. முருகன்** அவர்கள்
துணை முதல்வர்
வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

# வாழ்த்துரை

SRM கல்விக்குழும மாணவர்களிடையே தமிழ் இலக்கிய படைப்பாற்றலையும், தனித்திறன்களையும் வளர்த்தெடுக்கும் வகையில் நமது SRM கல்விக்குழுமங்களின் நிறுவனத் தலைவர் மாண்பமை டாக்டர். பாரிவேந்தர் ஐயா அவர்களால் 03.09.2015 அன்று வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் தொடங்கப்பட்டது. இதனை திருமிகு. இரவி பச்சமுத்து, தலைவர், SRM கல்விக்குழுமம், அவர்களின் வழிகாட்டுதலின்படி திறம்படச் செவ்வனே செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்மன்றம் வாயிலாக, மாணவர்களுக்குப் பல்வேறு பயிற்சிப் பட்டறைகள் அமைத்து, தமிழ் இலக்கிய போட்டிகளான பேச்சுப்போட்டி, பட்டிமன்றம் ஆகியவற்றில் எவ்வாறு பேசுவது, கவிதை எவ்வாறு எழுதுவது எனப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு, மாணவக் கண்மணிகளை மாநில அளவில், மாவட்ட அளவில், மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்வது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பது போன்ற நோக்கங்கள் மூலமாக நமது தாய்த்தமிழை வளர்ப்பது நமது தலையாய கடமையாகும்.

மேலும், இவ்வாறு கொடுக்கப்பட்ட பயிற்சிகளின் மூலம் நம் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு, தனித்திறன்களை வெளிப்படுத்தி மாநில, மாவட்ட அளவில் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளனர். இந்த வெற்றியைப் பதிவு செய்யும் விதமாக, "காணவே வந்தேன் - 2018" நிகழ்வில் சிறப்பு மலர் வெளியிட இருப்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மென்மேலும் பல படைப்பாற்றல் மிக்க மாணவர்களை இந்த மகத்தான மன்றம் உருவாக்கும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன். இதன் மூலம் நம்மாலான சிறு தொண்டினைத் தமிழுக்காகச் செய்துவரும் தமிழ்மன்ற உறுப்பினர்களுக்கும் அதன் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**ம. முருகன்**
துணை முதல்வர்

முனைவர் **பா. வானதி**
பேராசிரியர் & துறைத்தலைவர்
கணினி அறிவியல், பொறியியல் துறை

# *வாழ்த்துரை*

தமிழையும், தமிழ் மொழியின் மேன்மையையும் பேணிக்காக்கும் வகையில், நம் கல்விக்குழுமங்களின் நிறுவனத் தலைவர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் ஐயா அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்.

இம்மன்றம் தொடங்கிய நாள் முதல் பலரும் பாராட்டும் வண்ணம் பல அரிய செயல்பாடுகளையும் பல்வேறு விதமான போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளையும், பாராட்டுகளையும் மாணவர்கள் பெற்று வருகின்றனர் என்பதை நான் நன்கு அறிவேன்.

அவர்களின் வெற்றிப்பாதைகளை வரலாறு பேசும்வகையில், வரலாற்றுப் பதிவுகளாக இந்தச் சிறப்புமலரில் பதிவிட்டு, அதைக் காண கண் கோடி வேண்டும் என்ற வகையில் “காணவே வந்தேன் -2018” நிகழ்வில் வெளியிட இருப்பதை அறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

மன்றத்தைச் சேர்ந்த மாணவக் கண்மணிகள் இன்னும் பல்வேறு விதமான படைப்பாற்றல்களை வெளியிடவும், பல்வேறு விதமான பரிசுகளை வென்றுவரவும் வாழ்த்தி, அதற்குப் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் என்றும் துணை நிற்கும் என்பதை மகிழ்வோடு பதிவு செய்கிறேன்.

**பா. வானதி**
துறைத்தலைவர்

# பார் போற்றும் பாரி வள்ளலின் மகத்தான மன்றம்

தாய்மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையையும், அதன் சிறப்பையும் போற்றிப் பேணிக் காக்கும்வகையிலும், SRM கல்விக்குழும மாணவ மணிகள் பைந்தமிழ்ப் பற்று மிக்கவர்களாகவும் ஆற்றல்கள் பல பெற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதற்காக, 03.09.2015ஆம் ஆண்டு, நம் மாண்பமை வேந்தர் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்.

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி**

என்ற குறளுக்கேற்ப விளங்கும் நம் மாண்பமை வேந்தர் அவர்கள் எதிர் பார்க்கும் விதத்தில், நம் மாணவ மன்றம் இயங்கி வருகிறது என்பதற்கு நம் மாணவர்கள் பெற்றுள்ள பரிசுகளும் பாரட்டுகளும் சான்று.

நம் கல்லூரியின் முதல்வர் மற்றும் துணை முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் வீறுநடைபோட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே.

மாணவக் கண்மணிகளின் பரிசுகளையும், பாராட்டுகளையும் “காணவே வந்தேன்-2018” நிகழ்வில் சிறப்பு மலராக வெளியிட இருப்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வருங்காலத்தில் மாணவர்களின் தனித்திறன்களை மேம்படுத்தும் வகையில் இன்னும் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளைப் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் மேற்கொள்ளும் என்பதை மகிழ்வோடு பதிவு செய்கிறோம்.

**க. சண்முகம்**
உதவிப்பேராசிரியர்
கணினி அறிவியல், பொறியியல் துறை
ஒருங்கிணைப்பாளர், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம்



# பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற நிகழ்வுகள்

## 72-வது சுதந்திரதின விழா போட்டிகள்

நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், 72வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு,09.8.18 வியாழக்கிழமையன்று மாலை 4.00 மணியிலிருந்து 5.30 மணி வரை நம் கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டது. பட்டிமன்ற நிகழ்வு 13.08.2018 அன்று நடைபெற்றது.

**போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு**

**பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு**

1. ஜெ. தர்ஷினி - கணினி அறிவியல் பொறியியல் துறை, முதலாம் ஆண்டு, முதல் பரிசு
2. ந. பாலஅபிராமி - மின்னியல் மின்னணுவியல் துறை, மூன்றாம் ஆண்டு, இரண்டாம் பரிசு
3. பா. ஹரிதரணி - மின்னியல் மின்னணுவியல் துறை, இரண்டாம் ஆண்டு, மூன்றாம்பரிசு

**கவிதைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு**

1. சி. விக்னேஷ் - மின்னணுவியல் கருவியாக்கம் துறை, இரண்டாம் ஆண்டு, முதல்பரிசு
2. ஞா. பாலாஜி - மின்னியல் மின்னணுவியல் துறை, மூன்றாம் ஆண்டு, இரண்டாம்பரிசு
3. அ.ஜெ. அன்னபிரின்ஸ் - மின்னணுவியல் கருவியாக்கம் துறை, நான்காம் ஆண்டு, மூன்றாம்பரிசு



## கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்றவர்கள் விவரம் வருமாறு

1. சீ. சுப்புலட்சுமி - இயந்திரவியல் துறை, இரண்டாம் ஆண்டு, முதல்பரிசு
2. ஜெ. தீபிகா - கணினி அறிவியல் பொறியியல் துறை, இரண்டாம் ஆண்டு, இரண்டாம்பரிசு
3. கி. கிறிஸ்டினாகுணசீலி - மின்னணுவியல் கருவியாக்கம் துறை, மூன்றாம் ஆண்டு, மூன்றாம்பரிசு

## பட்டிமன்ற நிகழ்வில் பரிசுபெற்றவர்கள் விவரம் வருமாறு

1. ஜெ. தர்ஷினி - கணினி அறிவியல் பொறியியல் துறை, முதலாம் ஆண்டு, முதல் பரிசு
2. அ.ஜெ. அன்னபிரின்ஸ் - மின்னணுவியல் கருவியாக்கம் துறை, நான்காம் ஆண்டு, மூன்றாம் பரிசு

போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, 15.08.2018 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்வில் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நம் கல்லூரியின் முதல்வர், துணைமுதல்வர் மற்றும் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டனர்.




## பொதிகை தொலைக்காட்சி - ழகரம் நிகழ்வு

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற மாணவர்கள், 30.06.2018 சனிக்கிழமையன்று பொதிகை தொலைக்காட்சி நடத்திய "ழகரம்" நேரலை(live show) நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பாக தங்களது திறமைகளை வெளிப்படுத்தி இரண்டாம் பரிசாக 5000/- ரூபாயை பரிசாக பெற்றுள்ளனர். இந்நிகழ்வில் தமிழ் இலக்கியம் தொடர்பான வினாடி வினா, குறுக்கெழுத்துப் போட்டி, தமிழ்ப்பேச்சு, கவிதை எழுதுதல் போன்றவற்றில் மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. பங்கேற்ற மாணவர்கள் விவரம் வருமாறு...

1. ப. ஆதவராஜ் - குடிமுறை பொறியியல்துறை
2. ச. சங்கரதாஸ் - தகவல் தொழில்நுட்பத்துறை
3. அ. அருண்குமார்- மின்னியல் மின்னனுவியல் துறை
4. ஷாலினி - தகவல் தொழில்நுட்பத்துறை
5. ஆரோஸ்ரீ - தகவல் தொழில்நுட்பத்துறை
6. கு. ஸ்ரீநாத் - கணினி அறிவியல் பொறியியல் துறை




## வேந்தர் தொலைக்காட்சி - அறம் செய்வோம்

வேந்தர் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகி வரும் "அறம் செய்வோம்" என்ற கருத்து விவாத நிகழ்ச்சியில், நம் கல்லூரியில் இருந்து, நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற மாணவர்கள் "ஐந்து"பேர் பங்கேற்றனர்.. இதன் படப்பிடிப்பு 12.03.2018 அன்று நடைபெற்றது. நம் கல்விக் குழுமங்களில் நம் கல்லூரியில் இருந்து தான் அதிக மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பங்கேற்ற மாணவர்களின் விவரம் வருமாறு

1. ப. அகிலாண்டேஷ்வரி - மின்னணுவியல் கருவியாக்கம் துறை
2. ந. பால அபிராமி - மின்னியல் மின்னணுவியல் துறை
3. இளஞ்செழியன் - மின்னியல் மின்னணுவியல் துறை
4. மு. ஷாமினி - தகவல் தொழில்நுட்பத்துறை
5. இரா. இலட்சுமி - மின்னணுவியல் கருவியாக்கம் துறை

இந் நிகழ்வானது 27.5.18 மற்றும் 03.06.18 அன்று வேந்தர் தொலைகாட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.




## பொதிகை தொலைக்காட்சி - ழகரம் நிகழ்வு

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்ற மாணவர்கள், 18.11.17 சனிக்கிழமையன்று பொதிகை தொலைக்காட்சி நடத்திய “ழகரம்“ நேரலை(live show) நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பாக தங்களது திறமைகளை வெளிப்படுத்தி இரண்டாம் பரிசாக 5000/- ரூபாயை பரிசாக பெற்றுள்ளனர். இந் நிகழ்வில் தமிழ் இலக்கியம் தொடர்பான வினாடி வினா, குறுக்கெழுத்துப் போட்டி, தமிழ்ப்பேச்சு, கவிதை எழுதுதல் போன்றவற்றில் மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. பங்கேற்ற மாணவர்கள் விவரம் வருமாறு

1. அன்னபிரின்ஸ் .அ. ஜெ - மின்னணுவியல் கருவியாக்கம் துறை
2. லலிதப்பிரியா .க - மின்னணுவியல் கருவியாக்கம் துறை
3. சத்தியா .வெ - மின்னணுவியல் தொலைத் தொடர்புத் துறை
4. அகிலாண்டேஷ்வரி .ப - மின்னணுவியல் கருவியாக்கம் துறை
5. கனகராஜ் .க - குடிமுறை பொறியியல் துறை
6. லோகேஷ் .ஜெ - குடிமுறை பொறியியல் துறை






## சன் தொலைக்காட்சி - வாங்க பேசலாம் நிகழ்வு

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின், மின்னணுவியல் கருவியாக்கம் துறையின், இரண்டாம் ஆண்டு மாணவர் க. இரமேஷ் அரவிந்த், சன் தொலைகாட்சியின் “வாங்க பேசலாம்“ நிகழ்ச்சியில் பங்கேற்று, எது சுவையானது? ரோட்டு கடை உணவா? அல்லது ஹோட்டல் உணவா? என்ற தலைப்பில், ஹோட்டல் உணவு வகைகள் சிறந்தது!! என்று தன் கருத்துகளை எடுத்து வைத்தார். இந்த நிகழ்வின் ஒளிபரப்பு ஞாயிறு (4.2.18) பிற்பகல் 2.00 மணிக்கு சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது.



## மண்டல அளவில் சாதனை
## கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடம்

நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், இராமலிங்கர் பணிமன்றம், கல்லூரி மாணவர்களிடையே 27.07.17 அன்று நடத்திய மண்டல அளவிலான கட்டுரைப்போட்டியில், நம் கல்லூரியின் மின்னணுவியல் கருவியாக்கம் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி க. லலிதா பிரியா பங்கேற்று, இரண்டாம் பரிசு பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவருக்கு பரிசுத் தொகையாக ரூ. 3000/- மற்றும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது.




# மாவட்ட அளவில் சாதனை
# கட்டுரைப் போட்டியில் முதல் இடம்

நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறை, கல்லூரி மாணவர்களிடையே 15.09.17 அன்று நடத்திய மாவட்ட அளவிலான கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் நம் கல்லூரியின் மின்னணுவியல் கருவியாக்கம் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி க. லலிதாபிரியா பங்கேற்று மாவட்ட அளவில் கட்டுரைப்போட்டியில் முதல் இடம் பிடித்துள்ளார் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மாணவிக்கு தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சி துறை மூலம், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் P .பொன்னையா, IAS அவர்களின் பொற்கரங்களால் பரிசுத்தொகையாக ரூ.10,000 வழங்கப்பட்டது. இம் மாணவிக்கு நம் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், துறைத்தலைவர் மற்றும் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் ஆகியோர் அம் மாணவிக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.






## விஜய் தொலைக்காட்சி - நீயா? நானா?

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் சார்பாக, விஜய் தொலைக்காட்சியின் நீயா? நானா? நிகழ்வில் க. இரமேஷ் அரவிந்த், இரண்டாம் ஆண்டு, மின்னணுவியல் கருவியாக்கம் துறை மாணவர், மற்றும் பா. அகிலாண்டேஸ்வரி, நான்காம் ஆண்டு, மின்னணுவியல் கருவியாக்கம் துறை மாணவியும், பங்கேற்று பெண் வீட்டினர் Vs மாப்பிள்ளை வீட்டினர் என்ற தலைப்பில் தங்களது கருத்துக்களை எடுத்துக்கூறினர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.




# காணவே வந்தேன் - 2017

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் சார்பாக மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் “காணவே வந்தேன் -2017” என்ற பெயரில், பல்வேறு கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளாக கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, பட்டிமன்றம், கவிதைப்போட்டி, இசைத்தமிழ் போன்ற போட்டிகள் 05.08.17 சனிக்கிழமையன்று நடைபெற்றது.

காணவே வந்தேன்-2017 நிகழ்வானது, வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் இயக்குநரும், எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழத்தின் தமிழ்பேராயத் தலைவரும், மற்றும் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழத்தின் இணைத்துணை வேந்தருமான முனைவர் தி.பொ. கணேசன் ஐயா அவர்கள் தலைமையில் மற்றும் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் முதல்வர், முனைவர் ப. சிதம்பரராஜன் அவர்களின் வழிகாட்டுதலில் நிகழ்வானது நடைபெற்றது.




வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் துணை முதல்வர், முனைவர். ம. முருகன் அவர்கள் மற்றும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் தமிழ்பேராயச் செயலர் முனைவர். கரு. நாகராசன் ஐயா அவர்கள் போட்டிகளின் துவக்க விழாவில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக எஸ்.ஆர்.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரான பேராசியர் கா. மதியழகன் ஐயா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் நிகழ்வில், வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் பொறியியல் துறையின் துறைத்தலைவர் முனைவர் பா. வானதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். பாரிவேந்தர் மாணவ மன்ற ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் திரு. க. சண்முகம் அவர்கள் அறிமுக உறையாற்றினார்.

நிகழ்வின் இறுதியாக வெ. சத்தியா அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியை ப. அகிலாண்டேஸ்வரி மற்றும் க. இரமேஷ் அரவிந்த் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

இந்நிகழ்வில் வெளிக் கல்லூரியிலிருந்து 32 மாணவர்களும், நம் கல்லூரியிலிருந்து 38 மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.




போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு

பேச்சுப்போட்டி:

1. ஸ்வாதி, சாய்ராம் பொறியியல் கல்லூரி
2. ஜெ. ஐசக்ஜெயசுந்தர், சாய்ராம் பொறியியல் கல்லூரி
3. நா. அருண், மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் கல்லூரி

கவிதைப்போட்டி:

1. ஜெ. ஹேமகுமார், சாய்ராம் பொறியியல் கல்லூரி
2. சி. இராஜேஸ்வரி, வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
3. ச. இராம்குமார், வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

கட்டுரைப்போட்டி

1. சே. துர்கா, வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
2. ச. கோமதி, சாய்ராம் பொறியியல் கல்லூரி
3. அ. லலிதப்பிரியா, வள்ளியம்மை பொறியியல் கல்லூரி




இசைத்தமிழ்:

1. ஸ்ரீநிதி, வள்ளியம்மை பொறியியல் கல்லூரி
2. வெ. ஹரன், சாய்ராம் பொறியியல் கல்லூரி
3. ரா. சுஜித்ராம், முத்துக்குமரன் தொழில்நுட்பக்கல்லூரி

பட்டிமன்றம்:

1. ரா. அருண், மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் கல்லூரி
2. சா. கார்த்திக், சாய்ராம் பொறியியல் கல்லூரி

இந் நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின் நடுவர்களாக செயல்பட்டவர்கள் விவரம் வருமாறு

பட்டிமன்றம் நிகழ்விற்கு SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையைச் சார்ந்த உதவிப்பேராசிரியர் முனைவர் கு. கமலக்கண்ணன் அவர்கள் செயல்பட்டார்.






பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நிகழ்விற்கு SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையைச் சார்ந்த உதவிப்பேராசிரியர் திருமதி. க. ரமா அவர்கள் மற்றும் SRM செவிலியர் கல்லூரியின் உதவிப்பேராசிரியர் திருமதி. ஜெ. செல்வமேரி தேவக்கனி அவர்கள் மற்றும் SRM பல்கலைக்கழகத்தின், இயந்திரவியல் துறையின் உதவிப்பேராசிரியர் திரு. விக்னேஷ்வர் அவர்கள் செயல்பட்டனர்.

கவிதைப்போட்டி நிகழ்விற்கு SRM பல்கலைக்கழகத்தின் தமிழ்பேராயத்தின் உதவிப்பேராசிரியர் திரு. மு. பாலசுப்பிரமணி அவர்கள் செயல்பட்டார்.

இசைத் தமிழ் நிகழ்விற்கு வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் உதவிப்பேராசிரியர் திருமதி ச. சாந்தி அவர்கள் செயல்பட்டார்.

இந் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிப்பேராசிரியர் க. சண்முகம் அவர்கள் செயல்பட்டார்.



## தொழில்நுட்ப திட்டத்தின் சுருக்கவுரைகளை தமிழாக்கம் செய்யும் நிகழ்வு

நம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு, நம் தாய் மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையைப் பேணிக்காத்து, வளர்த்திடும் வகையில், நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றத்தின் மூலம், அனைத்து துறைகளின் தொழில்நுட்பம் சார்ந்த ஆங்கில கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்கலைச் சொற்களை அறிந்து கொள்ளும் விதமாக, அனைத்துதுறை மாணவர்களின் துறைச்சார்ந்த தொழில்நுட்ப திட்டத்தின் சுருக்கவுரைகளை தமிழாக்கம் (Tamil Translation of Project Abstract of their Concerned Department) செய்யும் நிகழ்வை, நம் கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு 16.03.2017 வியாழக்கிழமையன்று மாலை 4.30 மணியிலிருந்து 5.30 மணிவரை கணினி அறிவியல் பொறியியல் துறையின் கருத்தரங்க அறையில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கணினிபொறியியல் துறையில் 18 மாணவர்களும், மின்னணுவியல் கருவியாக்கம் துறையில் 19 மாணவர்களும், மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்புத்துறையில் 1 மாணவரும் பங்கேற்றனர்.

பரிசுபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு
முதல்பரிசு ம. தினேஷ், மூன்றாம் ஆண்டு, மின்னணுவியல் கருவியாக்கம் துறை.

இரண்டாம் பரிசு
வி. ஸ்ரீநாத், மூன்றாம் ஆண்டு, கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை

மூன்றாம் பரிசு
ம. சரண்யா, மூன்றாம் ஆண்டு, கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை

இந்நிகழ்விற்கு ஒருங்கிணைப்பாளராக க. சண்முகம், உதவிப்பேராசிரியர், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை மற்றும் ப. பிரவீன்குமார், உதவிப்பேராசிரியர், மின்னணுவியல் கருவியாக்கம் துறை ஆகியோர் செயல்பட்டனர்.





Certificate of Award

This is to certify that

M.K.Madhumeena,B.E.II Year (EIE)

of

Valliammai Engineering College

has won Third prize in the Inter College level Essay competition in Tamil

on the theme

"From Waste to Profit through Reduce, Recycle, Reuse"

organized by

National Productivity Council

as a part of

Productivity Week Celebrations 2017

at

Chennai

(K.V.R.Raju)
Regional Director
AIP-NPC, Chennai

# தேசிய உற்பத்தித் திறன் குழு நடத்திய கட்டுரைப் போட்டி நிகழ்வு

தேசிய உற்பத்தித் திறன் குழு (National Productivity Council)ஆனது, தேசிய உற்பத்தித் திறனின் வார விழாவை (National Productivity Week Celebrations) முன்னிட்டு, "வீணாவதை குறைத்தல், மறுசுழற்சி, மறுபயன்பாடு முறைகளை பயன்படுத்தி வீணாகும் பொருட்களின் கழிவுகளிலிருந்து இலாபம் பெறுதல்" ("From Waste to Profits through Reduce,Recycle,Reuse") என்ற தலைப்பில், பல்வேறு கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடத்திய கட்டுரைப்போட்டியில், நம் கல்லூரியின் மின்னணுவியல் கருவியாக்கம் துறையின்(EIE) இரண்டாம் ஆண்டு மாணவி க. மதுமீனா மூன்றாம் பரிசினைப் பெற்றுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மாணவிக்கு பரிசுத் தொகையாக ரூ.1000/- மற்றும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது.



# பொதிகைத்தொலைக்காட்சி கருத்துக்களம் நிகழ்வு

பொதிகை தொலைக்காட்சி 22.10.16 அன்று நடத்திய கருத்துக்களம் நிகழ்ச்சியில் கீழ்க்கண்ட நம் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று, இளைஞர்களிடம் மொழிப்பற்று வளர்கிறதா? தளர்கிறதா? என்ற தலைப்பில் தங்களது கருத்துக்களை மிகச்சிறப்பாக எடுத்துரைத்தனர்.

பங்கேற்ற மாணவர்கள் விவரம் வருமாறு

1. க. கனகராஜ் - குடிமுறை பொறியியல்துறை
2. ஜெ. லோகேஷ் - குடிமுறை பொறியியல்துறை
3. ஜெ. பிரசாந்த - மின்னணுவியல் கருவியாக்கம்துறை
4. க. ரமேஷ் அரவிந்த் - மின்னணுவியல் கருவியாக்கம்துறை
5. குமரவேல் - குடிமுறை பொறியியல்துறை

மேற்க்கண்ட நிகழ்ச்சி தொகுப்பு 26.11.2016 அன்று பொதிகை தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகியது.



# மாவட்ட அளவில் சாதனை கவிதைப் போட்டியில் முதல் இடம்

தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித் துறையானது, கல்லூரி மாணவர்களிடையே தமிழ் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும், வளர்க்கும் விதமாக கட்டுரை, கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகளை மாவட்ட அளவில் 23.12.16 நடத்தியது. இதில் நம் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி, வி. விஜயபாரதி கவிதைப்போட்டியில் மாவட்ட அளவில் முதலிடத்தை பெற்றுள்ளார். மேலும் இவருக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 10,000/- வழங்கப்பட்டது என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மாணவிக்கு நம் கல்லூரியின் முதல்வர் மற்றும் துணைமுதல்வர் அவர்களும் மற்றும் தமிழ்மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் அவர்களும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.



# சர்வதேச அளவில் சாதனை

மலேசியாவின் புகழ்பெற்ற தொலைக்காட்சியான ஆஸ்ட்ரோ வானவில் மற்றும் வணக்கம் மலேசியா மற்றும் எஸ். ஆர். எம். பல்கலைக்கழகமும் இணைந்து “பேசு தமிழா பேசு” என்ற தலைப்பில் பன்னாட்டு மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை நம் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை(17.12.16) அன்று நடத்தியது. இதில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இதில் நம் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி இரா. மதிவதனா அவர்கள் பங்கேற்று 3rd runner-up இடத்தை பெற்றுள்ளார். மேலும் அவருக்கு Rs.15,000/- (1000 ringgit-malasiya amount) பரிசுத்தொகையும், சுழற்கோப்பையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## குருநானக்கல்லூரி மற்றும் கலாம் சிந்தனை பேரவை நடத்திய தேசிய இளைஞர் எழுச்சி தின போட்டிகள்

தேசிய இளைஞர் எழுச்சி தினத்தை (Dr. A.P.J. Abdul kalam birthday) முன்னிட்டு குருநானக் கல்லூரி மற்றும் கலாம் சிந்தனை பேரவை இணைந்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளுவர், மாவட்ட கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடத்திய கட்டுரை, கவிதை போட்டிகளில் நம் கல்லூரியின் மின்னணுவியல் கருவியாக்கம் துறையின், நான்காம் ஆண்டு மாணவன் சந்தோஷ் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம் மற்றும் இவருக்கு பரிசாக ரூபாய் 2000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் குருநானக் கல்லூரி வழங்கி சிறப்பித்தது. மற்றும் கட்டுரைப் போட்டியில் கணினி பொறியியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி ச. பர்சானா பேகம், இரண்டாம் பரிசினை பெற்றுள்ளார், என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவருக்கு பரிசாக ரூபாய் 1500/- மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களையும் குருநானக் கல்லூரி வழங்கி சிறப்பித்தது.

## மாநில அளவில் சாதனை கவிதைப் போட்டியில் முதல் இடம்

இராமலிங்கர் பணி மன்றம் நடத்திய கல்லூரி அளவிலான கவிதைப் போட்டியில் மாநில அளவில் முதல் இடத்தை நம் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி வி. விஜயபாரதி பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவருக்கு பரிசுத் தொகையாக 5,000/- ரூபாயும் பாராட்டுச் சான்றிதழ்களையும் இராமலிங்கர் பணிமன்றம் வழங்கி சிறப்பித்தது. இம் மாணவிக்கு நம் கல்லூரியின் முதல்வர் மற்றும் துணைமுதல்வர் அவர்களும் மற்றும் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் க. சண்முகம் அவர்களும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.



## தேசிய இளைஞர் எழுச்சி தின போட்டிகள்

மாண்பமை ஆவுல் பக்கிர் ஜெனுலாபுதீன் அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 15ம் தேதியை தேசிய இளைஞர் எழுச்சி தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு, நம் கல்லூரியில், பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், கல்லூரி மாணவர்களுக்கு இளைஞர்களின் நெஞ்சில் எந்நாளும் அப்துல்கலாம்! என்ற தலைப்பில், பேச்சுப்போட்டி நிகழ்வானது, 29.9.16 வியாழக்கிழமையன்று நடைபெற்றது. மேலும் வெற்றி பெற்றற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசு பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு

முதல்பரிசு - ரா. மதிவதனா - மின்னியல் மின்னணுவியல் துறை

இரண்டாம்பரிசு - ம. பிரசாந்த் - மின்னணுவியல் கருவியாக்கம் துறை

மூன்றாம் பரிசு - பி. பொழிலன் - கணினி அறிவியல் பொறியியல் துறை

பேச்சுப்போட்டிக்கு நடுவர்களாக, மின்னனுவியல் தொலை தொடர்புத் துறையின் துறைத்தலைவர், முனைவர். கோமலா ஜேம்ஸ் அவர்கள் மற்றும் இயற்பியல் துறையின் உதவிபேராசிரியர், முனைவர். திருப்பதி அவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாக உதவிப்பேராசிரியர் க. சண்முகம் மற்றும் உதவிப்பேராசிரியர் சி. நந்தினி அவர்கள் செயல்பட்டனர்.

# மண்டல அளவில் சாதனை கவிதைப்போட்டியில் மூன்றாம் இடம்

இராமலிங்கர் பணி மன்றம் நடத்திய கல்லூரி அளவிலான கவிதைப் போட்டியில் சென்னை மண்டல அளவில் மூன்றாம் இடத்தை நம் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி வி. விஜயபாரதி பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவருக்கு பரிசுத் தொகையாக 2000/- ரூபாயும் பாராட்டுச் சான்றிதழ்களையும் இராமலிங்கர் பணிமன்றம் வழங்கி சிறப்பித்தது.


INDEPENDENCE DAY CELEBRATIONS 2016

CERTIFICATE OF APPRECIATION

பாராட்டு சான்றிதழ்

This certificate of appreciation is awarded to

Mr / Mrs / Selvi K.Kanagaraj I Place- College Level

For the Essay on

" I HELPED A CANCER PATIENT : YOU TOO CAN "

" நான் புற்றுநோயாளிக்கு உதவினேன் : நீங்களும் உதவலாம்"

Dr.S.M.CHANDRAMOHAN | Dr.M.Kanagavel | Dr.D.Kannan | Dr.MK.MURALITHARAN Dean



# இசோ இந்திய அமைப்பு கட்டுரைப் போட்டியில் முதலிடம்

வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் குடிமுறை பொறியியல் துறையைச் (Civil Dept) சேர்ந்த மாணவன் கனகராஜ் இசோ இந்திய அமைப்பு நடத்திய மாநில அளவிலான கட்டுரைப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார் என்பதை பெரும்மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சாரல் தமிழ்மன்றம் போட்டிகள்

எஸ்.எஸ்.என் பொறியியல் கல்லூரியின், சாரல் தமிழ்மன்றம் மார்ச் 10, 11, 12 ஆகிய தேதிகளில் மாணவ, மாணவிகளுக்கு பட்டிமன்றம், வாயை மூடிபேசவும், கோலப்போட்டி, கலக்கல்கவிதை, குறுக்கெழுத்து,

இசைத்தமிழ், தெருக்கூத்து, நாட்டுப்புறப்பாடல், கிறுக்கெழுத்து, சிறுகதை, போன்ற போட்டிகளை நடத்தியது. இதில் குறுக்கெழுத்து போட்டியில், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவிகள் க. கணிதா மற்றும் ஜெயந்தி முதல் பரிசாக ரூபாய் 500/- பரிசுத் தொகையும், நினைவுப்பரிசும், அப்துல்கலாம் பெயரில் புத்தகமும் மற்றும் காடு, உயிரினங்கள் தொடர்பான புத்தகமும் பரிசாக வழங்கப்பட்டது. மேலும் இசைத்தமிழ் போட்டியில், கணினி பயன்பாட்டுத்துறை மாணவன் நரேஷ்ராஜ் முதல் பரிசும், மற்றும் அனுஷ்கா என்ற மாணவி இரண்டாம் பரிசும் பெற்றுள்ளனர். முதல் பரிசாக ரூபாய் 500 பரிசுத் தொகையும், இரண்டாம் பரிசாக ரூபாய் 250 பரிசுத் தொகையும், அத்துடன் நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.

## மாவட்ட அளவில் சாதனை பேச்சுப்போட்டியில் முதல் இடம்

தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சித்துறை கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இடையே 27.1.2016 புதன்கிழமையன்று நடத்திய கட்டுரை, பேச்சு, மற்றும் கவிதைப் போட்டியில், நம் கல்லூரியில் இருந்து பேச்சுப்போட்டிக்கு ம. குறிஞ்சிக் கொற்றவன், குடிமுறை பொறியியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவனும், கட்டுரைப் போட்டிக்கு வி. விஜயபாரதி மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவியும் கலந்து கொண்டனர். இதில் பேச்சுப் போட்டியில் ம. குறிஞ்சிக் கொற்றவன் காஞ்சிபுரம் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று 10,000 ரூபாய் பரிசுத்தொகையையும் பெற்றுள்ளார். மாணவனுக்கு நம் கல்லூரி முதல்வர், துணை முதல்வர் மற்றும் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்ற பொறுப்பாசிரியர் க. சண்முகம் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.




## பட்டிமன்றப் பேச்சாளர் தேர்வு

பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றத்தின் தொடக்க நிகழ்வாக நம் வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில் பட்டிமன்றப் பேச்சாளர் தேர்வு 30.09.2015 புதன் கிழமையன்று மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. பட்டிமன்றப் பேச்சாளர் தேர்வுக்கு மொத்தமாக 76 மாணவ மாணவிகள் தங்களது பெயரை பதிவு செய்து இருந்தனர். இதில் 40 மாணவ மாணவிகள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட தலைப்பான தமிழ் மரபினையும் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாப்பது ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் மிகச்சிறப்பாக தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர். இதிலிருந்து அடுத்தக் கட்ட நிகழ்விற்கு 16 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பட்டிமன்றப் பேச்சாளர் தேர்வில் நடுவர்களாக கலந்து கொண்டு மாணவ, மாணவிகளை ஊக்குவித்து, பல அறிவுரைகளை கொடுத்து தேர்வு செய்தவர்கள் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத் தமிழத்துறை பேராசிரியர்கள், அவர்களின் பெயர்கள் வருமாறு:




1. பேரா. கா. மதியழகன்
2. முனைவர் பா. ஜெய்கணேஷ்
3. முனைவர் ச. சரஸ்வதி
4. முனைவர் இல. சுந்தரம்

மற்றும் சில தமிழ்த்துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கணினி அறிவியல் பொறியியல் துறையின் துறைத்தலைவர் முனைவர் பா. வானதி மற்றும் மின்னணுவியல் தொலைத் தொடர்புத் துறையின் துறைத்தலைவர் முனைவர் கோமலா ஜேம்ஸ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அடுத்த கட்ட நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு

SRM கல்வி குழுமங்களுக்கு இடையே நடைபெற்ற இறுதி பட்டிமன்றப்பேச்சாளர் தேர்வில் 20 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் நம் கல்லூரியில் இருந்து 5 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு

1. ம. குறிஞ்சிக்கொற்றவன் - குடிமுறைபொறியியல்- இரண்டாம்ஆண்டு
2. ரா.மதிவதனா - மின்னியல் மின்னணுவியல்துறை - இரண்டாம்ஆண்டு
3. ரா.ஸ்ரீவேணி - தகவல் தொழில்நுட்பத்துறை - மூன்றாம்ஆண்டு
4. மூ.ஷாமினி - தகவல் தொழில்நுட்பத்துறை- முதலாம்ஆண்டு
5. ஜெ.லோகேஷ் - குடிமுறைப் பொறியியல் - இரண்டாம்ஆண்டு

நமது கல்லூரி முதல்வரும், துணை முதல்வரும் தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மாணவ மாணவியர்களுக்கு தெரிவித்தனர்.




# எந்நாளும் எங்கள் நெஞ்சில் மேதகு ஆ.ப.ஜெ. அப்துல்காம்

SRM பல்கலைக்கழக கல்விக் குழுமத்தில் பயிலும், மாணவ, மாணவிகள் உறுப்பினர்களாக உள்ள பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றத்தின் மூலம், 15-10-15 அப்துல்கலாம் பிறந்த நாளையொட்டி, 'எந்நாளும் எங்கள் நெஞ்சில் மேதகு ஆ.ப.ஜெ. அப்துல்காம்' என்ற தலைப்பில், கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும், கவியரங்கமும் நடைபெற்றது. இந்த கவிதைத் தொகுப்பு நூலின் பதிப்புக் குழுவில் நம் கல்லூரியின் கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிப்பேராசிரியர் க. சண்முகம் அவர்கள் இடம் பெற்றிருந்தார். 'கலாம் அவர்கள் மாறவில்லை' என்ற தலைப்பில் அவருடைய கவிதையும் அந்த கவிதை தொகுப்பு நூலில் இடம் பெற்றிருக்கிறது. மேலும், இதில் மின்னணுவியல் கருவியாக்கம் துறையின் மாணவர் வ. குணபாலன் அவர்கள் கவியரங்கத்தில் அவர் எழுதிய கவிதையை பாடினார்.

# கணித்தமிழ்ப் பேரவை

கணித்தமிழ்ப் பேரவையும், அண்ணாப் பல்கலைக்கழகமும் இணைந்து, 30.10.2015 அன்று, கணித்தமிழ்ப் பேரவையின் தொடக்கவிழா நிகழ்வையும், கணித்தமிழ்ப் பயிலரங்கத்தையும் நடத்தியது. இதில் நம் கல்லூரியில் இருந்து கணினி அறிவியல் பொறியியல் துறையின் உதவிபேராசிரியர் க. சண்முகம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறையின் உதவிப்பேராசிரியர் இரா. தேன்மொழி அவர்களும் கலந்து கொண்டனர்.

# கணித்தமிழ்ப்பேரவை - பயிலரங்கம்




தமிழின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காகவும், கணித்தமிழ் விழிப்புணர்வு அளிக்கும் நோக்கிலும், அனைத்துத்துறை மாணவர்களும் மேற்கொள்ளும் ஆய்வுத்திட்டங்களையும், உள் பயிற்ச்சிகளையும் கணித்தமிழ் சார்ந்து மேற்க்கொள்ள வகை செய்யும் நோக்கத்திலும் மற்றும் கணினித்தமிழின் அடிப்படையும், பயன்பாட்டையும் கற்றுக் கொள்ளும் வகையில், நம் கல்லூரியின் கணித்தமிழ் பேரவையின் மூலம் 28.06.18 வியாழக்கிழமையன்று நம் கல்லூரி ஆசிரியர்களுக்கு தமிழில் வலைப்பக்கம் உருவாக்குதல் மற்றும் தமிழில் குறுஞ்செயலி உருவாக்குதல் (Webpage and Mobile app creation in tamil) என்ற தலைப்பில் ஒருநாள் பயிலரங்கம் (Workshop) நடத்தப்பட்டது.

### கணித்தமிழ்ப் பேரவையின் நோக்கங்கள்

1. விக்கியூடகத் திட்டங்கள் போன்ற பொதுவள ஊடகங்களில் தமிழ் உள்ளடக்கப் பங்களிப்புகளை மேம்படுத்துதல்.
2. தமிழில் வலைப்பூ (Web Design) உருவாக்கம்.
3. கட்டற்ற மென்பொருட்களை(Open Source Software) அறிமுகப்படுத்துதல்.
4. அனைத்துத்துறை மாணவர்களும் மேற்கொள்ளும் ஆய்வுத் திட்டங்களையும், உள் பயிற்சிகளையும் கணித்தமிழ் சார்ந்து மேற்கொள்ளுதல்.
5. தமிழில் குறுஞ்செயலி (Mobile Application), மென்பொருள் உருவாக்குதல்.

## கணினித்தமிழ்





கணினித்தமிழின் அடிப்படையும், பயன்பாட்டையும் கற்றுக் கொள்ளும் வகையில் 12.06.17 திங்கள்கிழமை அன்று நம் கல்லூரி ஆசிரியர் மற்றும் வெளிக்கல்லூரி ஆசிரியர்களுக்கு “கணினித்தமிழ்” (Tamil Computing) என்ற தலைப்பில் ஒருநாள் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி திட்டம் (FACULTY DEVELOPMENT TRAINING PROGRAMME) நடத்தப்பட்டது.



## பகவான் மகாவீரர் நிறுவனம் - கட்டுரைப் போட்டி

பகவான் மகாவீரர் நிறுவனம், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பகவான் மகாவீரரின் வாழ்க்கை மற்றும் போதனைகளை தெரிந்து கொள்ளும் விதமாக நடத்திய கட்டுரைப் போட்டியில் சிறப்புபரிசாக ரூபாய் 5000/- பரிசுத்தொகையையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் க. கனகராஜ், ச. சாதனா ஆகிய மாணவ மாணவிகள் பெற்றனர்.

## சுதந்திர தின விழா போட்டிகள் - 2016

நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றமும், நாட்டுநலப்பணித் திட்டஅமைப்பும் இணைந்து, 15.08.2016 சுதந்திர தின விழாவை முன்னிட்டு நம் கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி,&கவிதைப்போட்டி நிகழ்வுகள் 11.8.16 வியாழக்கிழமையன்று மாலை 4.30 மணியிலிருந்து 5.30 மணிவரை நடத்தப்பட்டது.இதன் தொடர்ச்சியாக பட்டிமன்றநிகழ்வுகள் 12.8.16 வெள்ளிகிழமையன்று மாலை 4.30 மணியிலிருந்து 5.30 மணிவரை, கருத்தரங்க அறையில் நடத்தப்பட்டது. பேச்சுப்போட்டியில் 12 மாணவர்களும், கட்டுரைப்போட்டியில் 18 மாணவர்களும், மற்றும் கவிதைப்போட்டியில் 12 மாணவர்களும் பங்கேற்றனர். பட்டிமன்ற நிகழ்வில் 14 மாணவர்கள் பங்கேற்றனர். பட்டிமன்ற நிகழ்விற்கு நடுவராக மின்னனுவியல் மற்றும் தொலைத் தொடர்புத்துறையின் துறைத்தலைவர் முனைவர்.கோமலாஷேம்ஸ் அவர்கள் பங்கேற்று சிறப்பாக செயல்பட்டார்.






# வியாழக்கிழமை நிகழ்வு

நம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு, நம் தாய் மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையை பேணிக்காத்து, வளர்த்திடும் வகையில், நம் கல்லூரியின் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றத்தின் மூலம், வாரந்தோறும் வியாழக்கிழமையன்று, முதலாம் ஆண்டு இணைப்புக் கட்டிடத்தின் கீழ் உள்ள இடத்தில் பேச்சுப்போட்டி, பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், போன்ற செயல்பாடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி பயிற்சி, பட்டிமன்றத்தில் எவ்வாறு பேசுவது? கவிதை எழுதும் விதம் போன்றவை விவாதிக்கப்பட்டு, இதில் சிறந்து விளங்கும் மாணவர்களை பல்வேறு தமிழ்மன்றங்கள் நடத்தும் மாநில, மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்குபெறச் செய்வது, மேலும் தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்கெடுக்கச் செய்வது இந்த வியாழக்கிழமை பயிற்சி பட்டறையின் நோக்கமாகும்.

## எவனோ? எவனோ?

அறும்பு முளைக்கும் முன்னே அதை அழித்தவன் எவனோ?
குறும்பு தவழும் குழல்வாய் மொழியை குலைத்தவன் எவனோ?
கருவிழியில் உயிர்வலியை உருவாக்கியவன் எவனோ?
வானம்பானம்பாடியாய் வலம் வந்தவளை வஞ்சித்தவன் எவனோ?
கனியாத வயதில் கனவுகளை கலைத்தவன் எவனோ?
அறியா சிறு பிஞ்சை இருட்டறையில் அடைத்தவன் எவனோ?
\நொடி பொழுதில் நெடு வாழ்வை நொறுக்கியவன் எவனோ?
கொடிய பிணி போல குரல்வளையை நெறித்தவன் எவனோ?
கருவில் சுமந்தவளை கூட மறந்து சீர்குகுலைத்தவன் எவனோ?
செந்தேனாய் இனிக்கும் இதழை சிதைத்தவன் எவனோ?
பனிக்குடம் உடைந்து பாரில் நுழைந்த அரக்கன் எவனோ?
தாய், தங்கை,தமக்கையுடன் இருந்தும் இவற்றை செய்தவன் ஒரு தாய் மகனோ?
மானுட உலகில் மனிதி வயிற்றில் மாக்களை படைத்தவன் சிவனோ?

**இரா. இராஜேஸ்வரி**
நான்காம் ஆண்டு
கணினி பொறியியல் துறை

## காதல் துளிகள்

மதத்தை பார்த்து வருவதல்ல காதல்
மனதைப் பார்த்து வருவதுதான் காதல்
காதலுக்கு கண்ணும் இல்லை, காதும் இல்லை
என்கிறார்களே!
அதை போல் காதலுக்கு சாதியும் இல்லை, மதமும் இல்லை
என்று நீ எப்பொழுது உணர்கிறாயோ அதுவரை காத்திருப்பேன்
என் காதலிக்காக!!
நான் உன் மீது கொண்ட காதல் என் உயிருக்கு மேலானது...
எனக்கு உயிர் கொடுக்கும் கடவுளைக்
நீ வருவாய் என்று நான் எண்ணினேன் ஆனால் நீயோ,
அந்த கடவுளைக் காரணமாய்
கொண்டு என்னை வேண்டாம் என்கிறாய்!!!

**த. பிரவின் ராஜ்**
மூன்றாம் ஆண்டு, இயந்திரவியல் துறை

## அம்மா

அம்மா நீ என் மீது கொண்ட பாசம்
கடல் அலையே போன்றது
கலப்படமில்லாத உன் அன்பு
மண்ணின் தன்மையை போன்றது
வேற்றுமை இல்லாத உன் நேசம்
காற்றின் தூய்மையே போன்றது

**த. பிரவின் ராஜ்**
மூன்றாம் ஆண்டு, இயந்திரவியல் துறை

## கல்லூரி

ஒரு மரத்தில் கூடினோம்
ஒரு மனதோடு ஆடினோம்
பல கிளிகள் பல கழுகுகள்
சில துணை தேட சில இணை சேர
நாலாண்டு நாடகம் இது
நம்மை அறியாமல் ஓடியது
வாழ்க்கை இதுவென புரிந்தது

**கா. தமிழ் வாணன்**
மூன்றாம் ஆண்டு, இயந்திரவியல் துறை

## மனம்

மனம் மதங்களை நோக்கி செல்வதில்லை
மனிதனோ மதங்களை நீக்கி செல்வதா இல்லை
மனம் ஒன்றி போக மதம் தேவைப்படவல்லை
தேகம் ஒன்றி போக மதம் விடுவதாக இல்லை
பிறை அணிந்தவனும் பிறை யானவனும்
இதை குறை என்று கூறவல்லை
நான் உன் மீது காதல் கொள்ள
நீ என் மீது காதல் கொள்ள
நம் காதலை மதங்கள் கொல்ல!!

**கா. தமிழ் வாணன்**
மூன்றாம் ஆண்டு, இயந்திரவியல் துறை

## தமிழின் சகாப்தம்

முத்தமிழின் மொத்த உருவமே,
உன் எழுத்தாள் தமிழின் வளர்ச்சி
சூரியனை போல் ஒளிர்ந்தது..
உன் நெறிபட ஆளுமையால்
தமிழும் தமிழகமும் மலர்ந்தது..
இன்று உன் உடல் மறைந்தாலும்
தமிழோடு கலந்த உனது உயிர்
என்றும் மறையாது...

**ச. ரவி சங்கர்**
மூன்றாம் ஆண்டு, இயந்திரவியல்

## காதல்..!

கருமை முதல்
வெண்மை வரை
பரிவு முதல்
பிரிவு வரை
அரவணைப்பு முதல்
அழுகை வரை
கண்கள் முதல்
கலவி வரை
வள்ளுவன் முதல்
வைரமுத்து வரை
காதல்..!

**கா. தமிழ் வாணன்**
மூன்றாம் ஆண்டு,
இயந்திரவியல் துறை

## தமிழே நீ!

அமைதியும் நீ
ஆனந்தமும் நீ
ஆர்ப்பரிப்பும் நீ
மழலை மொழியும் நீ
மா ஞானிகளின்
மறைபொருளும் நீ
வான்வெளியும் நீ
வையகத்தின் அறிவும் நீ
வனச் சோலையும் நீ
வகையில்லா வசந்தமும் நீ
எல்லாமுணர்ந்த
ஏகாந்தமும் நீ
உணர முடியா
என் உணர்வும் நீ
என் உயர்வும் நீ
என் உயிரும் நீ!
தமிழே நீ!!!

**க. அற்புதானந்தம்**
மூன்றாம்ஆண்டு
மின்னியல் மற்றும்
மின்னணுவியல் துறை

# விடியலைத் தேடி

விடியலைத் தேடி
விடியலை நானும் பாடி
கவியுக வாழ்வை நாடி
சேர்க்கிறேன் சிந்தையில் செய்தி

நாடும், ஊழலோடு உறவாடி
கையூட்டுகளை கொண்டாடி
களவோடு கதை பேசி
வாழ்வது தான் விடியலோடி

இதுதுணைக் கண்ட நாடாகும்
மொழிகள் பல அதன் வளமாகும்
தொன்மையிலும் தொன்மை
எம்மொழியாகும்
தென்கோடி நாடு எம்மை
தனித்து வடுவது சரியோடி

கிடைத்ததே விடுதலை என்று
கிடந்துவிட்டோம் நாமும் அன்று
தகரத்தை தங்கமென்று
தலைவர்கள் என்றோம் சிலரை இன்று
தலைமைக்கென்று தகுதி ஒன்று
வைக்க வேண்டும் நாட்டில் இன்று!!!
வெல்லட்டும் பாரதம்!
ஜெய்ஹிந்த்!!!

**அ.ஜெ. அன்ன பிரின்ஸ்**
நான்காம் ஆண்டு
மின்னணுவியல் கருவியாக்கம் துறை



ஓவியம்
**விஷ்ணு பிரியா**
மூன்றாம் ஆண்டு
மின்னணுவியல் கருவியாக்கம் துறை

# எழுதுகிறேன் விடியலைத் தேடி....

விடியலைத் தேடி ஓடு
நீ விரைந்து வெற்றியைத் தேடு.
இன்று உறங்கிக் கொண்டிருக்கும் உலகத்தை எழுப்பி
உந்தன் வலியைப் பாடு.

காலம் கடந்து சென்றால்
உந்தன் பாரங்கள் நிற்கும் முன்னால்.
அந்த விடியலும், சூழ்நிலைகளும்
உனக்கு எதிரியாய் அமையும் பின்னால்.

விடியலை நெருங்கும்வரை உறங்காதே
இடையூறு எதற்கும் கலங்காதே
விதியின் செயலுக்கு மயங்காதே
உன் மனதின் உறுதியை மறவாதே.

உன் வறுமை காலங்கள் போதும்
உன்னை வருத்திய நிமிடம் போதும்
நீ பின்னே வருகிற ஒளியின் நிழலை,
இன்றே எழுந்து நீ அடையும்.

உன்னை படைத்த இறைவனும் தவறுயில்லை
நீ பிறப்பு எடுத்ததும் தவறுயில்லை
காலத்தின் கொடுமையை அகற்றி விடு
உன் விதியின் கூறுகளை மாற்றி விடு

நீ செல்லும் பாதையில் அச்சம் தவிர்
உன் துன்பத்தை எல்லாம் துடைத்திடுவீர்
இனி வேதங்கள் நான்கையும் படித்துவிடு
உன் விடியலை நீயே திரட்டிவிடு.

வானத்தின் செம்மை கரையும் முன்
திங்கள் முகத்தை காட்டும் முன்
பறவைகள் கூடு சேறும் முன்
தங்கள் வீடு சேறும் எம் நண்பர்கள்

உங்கள் ரசணைக்கு விருந்தாய் பா கூற வந்துள்ளேன்
உணவு வளர்த்து உயிர் வளர்க்கும் உழவுநண்பனோ
உணர்ச்சிப்பா பாடுகிறான் - விடியலைத் தேடி
அண்டை நாடுகள் அடிமைப் படுத்த தம் பண்டைமரபு

சிறப்பு தேடுகிறான் - விடியலைத் தேடி
ஈழப்போரால் நிலத்தை இழந்து தம் பந்தம்
பிரிந்து இறங்கற்பா பாடுகிறாள் - விடியலைத் தேடி
தமிழை மட்டும் மதித்து தமிழனை விரட்டும் புவியிலே

அசுரக்குலத்தவன்  ஒடுகிறான் விடியலைத் தேடி
மிருகங்களுக்கு இரையாகும் இறைவிகளை கண்டு
இருளில் வாடுகிறாள் பாரதத்தாய் - விடியலைத் தேடி
ஊளழல் எனும் விதை உதிர்ந்து வளர்ந்து நிற்கும் நாட்டிலே

காந்திகளையே நாடுகிறார் சாமானியர் - விடியலைத் தேடி
பாசக்கயிற்றில் சிக்காமல் வறுமை சங்கிலியில் அடைப்பட்ட
எம்மக்கள் சாடுகின்றனர் உம்மையே - விடியலைத் தேடி
அலைகளில் அழியும் சுவடுகள் அல்ல நம் பிறப்பு என் தோழனே!!

ஆழிப்பேரலையே வந்தாலும் எதிர்த்து நில் துணிவாய் இன்று கேள்விகளை கேட்டும் எம் தோழியே பதில்களை ஈன்று மக்கள் மனதில் தெளிவு தருவாய் உன்
கண்களை கைகளால் மூடி விடியலை தேடும் சமுதாயமே
ஊமையாக இராமல் உன் கைகளை உயர்த்தி அநீதியுடன் போராடு!

என்றும் இருளே நிழலை மட்டுமே மறைக்கும் என்று
ஏளனமாய் பேசும் தீயவரிடம் கூறு
ஒளி பெற்று வாழும் காலம் வெகுதூரம் இல்லை
ஓங்கி நிற்கும் உன் புகழ் வாழ!
எழுதுகிறேன் விடியலை தேடி....

**ஞா. பாலாஜி**
மூன்றாம் ஆண்டு
மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை.



ஓவியம்

**ஸ்ரீராம்**
மூன்றாம் ஆண்டு
இயந்திரவியல் துறை

# அற்புதமான பொது அறிவு

**படித்துப் பாருங்கள், மெய்சிலிர்த்துப் போவீர்கள்....**

- தயிராக மாற்ற முடியாத ஒரே பால் - ஒட்டகப்பால்.
- ஒட்டகத்தை விட, அதிக நாட்கள் தண்ணீர் இன்றி வாழும் ஒரு உயரினம் - கங்காரு எலி.
- துருவக் கரடிகள் அனைத்துமே இடது கை பழக்கம் உடையவை. பின்புறமாக மரம் ஏறும் விலங்கு - கரடி.
- ஒரு மோட்டார் வாகனத்தில் 30 சதவீதம் எரிபொருள் மட்டும்தான் வண்டி ஓடுவதற்கு பயன்படுகிறது. மீதமுள்ள 70 சதவீதம் எரிபொருள் கார்பன் மோனோ ஆக்சைடு என்கிற ஒரு நச்சு வாயுவாகத் தான் வெளியேறுகிறது.
- சீனாவில் ஒரு மனிதனின் பிறந்தநாள் அவன் தாய் வயிற்று கருவில் உருவாகும் நாளில் இருந்தே கணக்கிடப்படுகிறது.
- ஆக்டோபஸ்க்கு மூன்று இதயம் இருக்கும். அதன் ரத்தம் நீல நிறத்தில் இருக்கும். குரங்குக்கு இரண்டு மூளை இருக்கிறது.
- சூரியனின் வயது 470 கோடி ஆண்டுகள். (2010 ஆண்டு வரை) பூமியின் மீது காணப்படும் பழைய பாறைகளை கொண்டு இதை கணக்கிட்டு உள்ளனர்.
- சுகபிரசவம் அல்லாமல் தன் தாயின் வயிற்றில் இருந்து கிழித்து வெளியே எடுக்கப்பட்டவர் ஜூலியர் சீசர். அதனால்-தான் இந்த முறைக்கு சீசரியன் என்று பெயர் வந்தது.
- பிறந்து ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது.
- நான்கு வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 100 கேள்விகள் கேட்கும்.
- தைவான் நாட்டில் உள்ள மூன்யூச் மரம் 4120 ஆண்டுகள் பழைமையானவை.
- காட்டுக்கே ராஜா என்று சொல்லும் விலங்கு சிங்கம். ஆனால், அதன் ஆயுட்காலம் வெறும் 15 ஆண்டுகள் தான். வயிறு நிரம்பி இருந்தால்-தான் சிங்கம் கர்ஜிக்கும்.
- மிகச் சிறிய இதயம் கொண்ட விலங்கு - சிங்கம்.
- “லங்கா வீரன் சுத்ரா ” என்ற மத நூல் முழுவதும் ரத்தத்தால் எழுதப்பட்டது.
- தன் காதை (காது) நாக்கால் தொடும் ஒரே விலங்கு - ஒட்டகம்.
- இலைகள் உதிர்க்காத மரம் - ஊசி இலை மரம்.
- காட்டு வாத்து கருப்பு நிறத்தில் தான் முட்டையிடும்.
- குளிர் காலத்தில் குயில் கூவாது.
- எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புகளை அறிமுகபடுத்தியுள்ளார். அவர் மூன்று மாதங்கள் மட்டுமே பள்ளிக்கூடம் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ❖ லியான்னடோ டாவின்சி ஒரு கையால் எழுதி கொண்டே, மறுகையால் படம் வரையும் திறன் உடையவர். அவர் வரைந்த உலகப்புகழ் பெற்ற மோனாலிச ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
- ❖ கரப்பான்பூச்சி தலையை வெட்டி எறிந்தாலும், அது தலை இன்றி ஒன்பது நாள் வரை உயிர்வாழும். ஒன்பதாவது நாளின் இறுதியில் அது பசியில் தான் இறந்து போகும்.
- ❖ கிளியும், முயலும் தன் பின்னால் இருப்பதை தலையை திருப்பாமலே கண்டுபிடித்து விடும்.
- ❖ யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து, அதை ஆறால் பெருக்கி வரும் விடையே - யானையின் உயரம்.
- ❖ கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு - இதயம்.
- ❖ மனிதன் இறந்து போனதும் முதலில் செயலிழக்கும் உறுப்பு - இதயம்.
- ❖ 1610 ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் தொகை வெறும் 3100 பேர் தான்.
- ❖ ஒரு ஆண்டு ஆணாகவும் அடுத்த ஆண்டு பெண்ணாகவும் மாறும் உயரினம் - ஈரிதழ் சிட்டு.
- ❖ வால்டிஷ்னி மொத்தம் 32 ஆஸ்கார் விருதுகளை பெற்றுள்ளார்.
- ❖ ஒருதலைமுறை என்பது 33 ஆண்டுகள்.
- ❖ ஒட்டகம் ஒரே சமயத்தில் 90 லிட்டர் தண்ணீரைக் குடிக்கும். ஆனால் ஒட்டகத்திற்கு தண்ணீரில் நீந்த தெரியாது.
- ❖ தத்துவம் பயின்று ஆன்மீகவாதியான பிறகு தான் கராத்தே வீரர் ஆனார் - புருஸ்லீ.
- ❖ சுவாரின் என்ற ஆஸ்திரேலிய நாட்டு பறவை குளிக்காமல் தன் கூட்டுக்குள் நுழையாது.
- ❖ விமானத்தில் இருக்கும் கருப்பு பெட்டி ஆரஞ்சு நிறத்தில் இருக்கும்.
- ❖ சீல்வண்டுகள் 17 ஆண்டுகள் தூங்கும்.
- ❖ யானை, குதிரை நின்று கொண்டே தூங்கும்.
- ❖ நீர் நாய் ஒன்றரை நிமிடம் மட்டுமே தூங்கும்.
- ❖ டால்பின் ஒரு கண் விழித்தே தூங்கும்
- ❖ புழுக்களுக்கு தூக்கமே கிடையாது.
- ❖ நாம் இறந்து பிறகும் கண்கள் மட்டும் 6 மணிநேரம் பார்க்கும் தன்மையுடையது.

**க. சண்முகம்**

உதவிப்பேராசிரியர்

கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை

வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

# தாய்

கடவுளிடம் சென்று வேண்டினால் தான்
செய்வார் எதையும் ஆனால்
நீ மனதில் நினைத்தாலே போதும்
எதையும் செய்பவள்தான் தாய்...!
உலகத்தைப் படைத்தது கடவுள் ஆனால்
உன்னைப் படைத்தது தாய்...!
கடவளைக் கண்ணில் காணமுடிவதில்லை
என்று சிலர் வருந்துவார்கள் ஆனால்
தன்முன் உள்ள கடவுளை
நினைக்கக் கூடமாட்டார்கள்
அவள்தான் தாய்...!

**எம். சண்முகசுந்தரி**
மூன்றாம் ஆண்டு
மின்னணுவியல் கருவியாக்கம் துறை

# விடாமுயற்சி

கொலம்பஸின் முயற்சி அமெரிக்காவை கண்டுபிடித்தது!
இராபர்ட் புரூஸின் முயற்சி ஸ்காட்லாண்டை மீட்டுத்தந்தது
தெருவிளக்கின் கீழ் நின்று படித்த முத்துசாமி ஐயரின்
முயற்சி அவரை நீதிபதி ஆக்கியது !
அம்பேத்கரின் முயற்சி
இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தை தந்தது!
விறகு வெட்டியின் மகனாகப் பிறந்த ஆப்ரகாம் லிங்கனின் முயற்சி
அவரை அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் ஆக்கியது
ஆம்!
இவர்களெல்லாம் விடாமுயற்சியின்
விளையாட்டுப்பிள்ளைகள்!
விதியென்று வீழ்ந்து கிடந்த மனிதன்
விமானம் படைக்கவில்லையா?
ராகுகாலம் பார்த்த மனிதன்
இராக்கெட் விடவில்லையா?
நிலவுகாட்டி சோறூட்டிய மனிதன்
நிலவிற்கே சென்று சாப்பிட முயலவில்லையா?
இதயம் நிறைய முயற்சி இருந்தால்
இமயத்தைக் கூட தோளில் சுமக்கலாம்!

**க. கார்த்திகா**
இரண்டாம் ஆண்டு
மின்னணுவியல் தொலைத்தொடர்புத்துறை

# தொழில்நுட்ப ஆங்கில வார்த்தைகளுக்கு இணையான தமிழ் வார்த்தைகள்

| | | |
|---|---|---|
| Analog | - | உவமம் |
| Digital | - | துடிமம் |
| Computer | - | கணிபொறி |
| CPU | - | மையச் செயலகம் |
| Memory | - | நினைவகம் |
| Keyboard | - | விசைப்பலகை |
| Monitor | - | திரையகம் |
| Mouse | - | சுட்டி, சொடுக்கி |
| Floppy Disk | - | நெகிழ்வட்டு |
| Hard Disk | - | நிலைவட்டு |
| Compact Disk | - | குறுவட்டு |
| Disk Drive | - | வட்டகம் |
| Printer | - | அச்சுப்பொறி |
| Inkjet Printer | - | மைஅச்சுப் பொறி |
| Dot Matrix Printer | - | புள்ளி அச்சுப்பொறி |
| Laser Printer | - | ஒளியச்சுப் பொறி |
| Ploter | - | வரைவு பொறி |
| Scanner | - | வருடு பொறி |
| Modem | - | இணைக்கி |
| Input | - | உள்ளீடு |
| Output | - | வெளியீடு |
| Network | - | பிணையம் |
| Internet | - | இணையம் |
| WWW | - | வைய விரிவலை |
| Website | - | வலையகம் |
| Portal | - | வலைவாசல் |
| Webpage | - | வலைப்பக்கம் |
| Webcasting | - | வலைபரப்பு |
| Netizen | - | வலைவாசி |
| Browser | - | உலாவி |
| Server | - | புரவன் |
| Client | - | கிளையன் |

| | | |
|---|---|---|
| Terminal | - | முனையம் |
| Workstation | - | பணி நிலையம் |
| Node | - | கணு |
| Search Engine | - | தேடு பொறி |
| E-mail | - | மின் அஞ்சல் |
| E-Commerce | - | மின் வணிகம் |
| Download | - | பதிவிறக்கம் |
| Upload | - | பதிவேற்றம் |
| Encryption | - | மறையாக்கம் |
| Decryption | - | மறைவிலக்கம் |
| Hackers | - | ஊடுருவிகள் |
| E-Cash | - | மின்பணம் |
| IT | - | தகவல் தொழில்நுட்பம் |
| Text | - | உரை |
| Graphics | - | வரைகலை |
| Sound | - | ஒலி |
| Audio | - | கேட்பொலி |
| Video | - | நிகழ்படம் |
| Photo | - | நிழற்படம் / ஒளிப்படம் |
| Microprocessor | - | நுண்செயலி |
| ROM | - | அழியா நினைவகம் |
| RAM | - | நிலையா நினைவகம் |
| Mother Board | - | தாய்ப்பலகை |
| Expansion Slot | - | விரிவாக்கச் செருகுவாய் |
| Animation | - | நகர்படம் |
| Motion capture | - | அசைவுப்பதிவு |
| Wire freame | - | வலைப்புள்ளிச்சித்திரம் |
| Rendering | - | உருப்பெருதல் |
| Texture | - | புறத்தோற்றம் |
| Multimedia | - | பல்லூடகம் |
| Data | - | விவரம் / தகவல் |
| Column | - | நெடுவரிசை |
| Row | - | கிடைவரிசை |
| Table | - | அட்டவணை |
| Data Base | - | தகவல் தளம் |
| Word Processor | - | சொல் செயலி |

| | |
|---|---|
| Spread Sheet | - விரிதாள் |
| Operating System | - இயக்க முறைமை |
| Platform | - பணித்தளம் |
| GUI | - வரைகலைப் பணிச்சூழல் |
| User | - பயனாளர் / பயனாளி /பயனர் Password - நுழைசொல் |
| Application Package | - பயன்பாட்டுப் பணித்தொகுப்பு திவீறீமீ - கோப்பு |
| Document | - ஆவணம் |
| Directory | - கோப்பகம் |
| Folder | - கோப்புறை |
| Variable | - மாறி |
| Constant | - மாறிலி |
| Instruction | - ஆணை |
| Command | - கட்டளை |
| Program | - செயல்வரைவு |
| Function | - செயல்கூறு |
| Interpreter | - ஆணைமாற்றி |
| Compiler | - மொழிமாற்றி |
| Translator | - மொழிபெயர்ப்பி |
| Binary Language | - இரும மொழி |
| Window | - சாளரம் |
| Menu | - பட்டியல் |
| Icon | - சின்னம் / குறும்படம் |
| Font | - எழுத்துரு |
| Erase | - அழி |
| Delete | - நீக்கு |
| Remove | - அகற்று |
| Format | - வடிவமை / அழகமை |
| Virtual | - மெய்நிகர் |
| Virtual Reality | - மெய்நிகர் நடப்பு |
| Artificial Intelligence | - செயற்கை நுண்ணறிவு |
| Remote Control | - தூர இயக்கி |
| CD Player | - இறுவட்டு இயக்கி |

**க. சண்முகம்**
உதவிப்பேராசிரியர்
கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை
வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

# வள்ளியம்மை பொறியியல் கல்லூரி

எஸ்.ஆர்.எம் நகர், காட்டாங்குளத்தூர் - 603203

# பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

# காணவே வந்தேன் - 2018



**நடைபெறும் போட்டிகள்**

- பட்டிமன்றம்
- பேச்சுப்போட்டி
- கட்டுரைப்போட்டி
- கவிதைப்போட்டி
- சொல்விளையாட்டு

பதிவுக்கட்டணம் : ரூ. 100

பதிவிற்கு கடைசி நாள் : 03-09-2018

நிகழ்வு நடைபெறும் நாள் : 08-09-2018

## தமிழால் இணைவோம்





தொடர்புக்கு : 9715366091
9677850257

பதிவிற்கு மின்னஞ்சல் முகவரி
vecpvmtamilmandram@valliammai.co.in

https://www.facebook.com/வள்ளியம்மை பொறியியல் கல்லூரி பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்

# பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம் - ஆண்டு விழா



# கல்வித் திருவிழா - 2017

